ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2019 ஏப்பிறல் 23 |

## 2019 மாச்சில் பணவீக்கம் அதிகரித்தது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் : 2.9%

ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 1.7%

மாதாந்தச் சதவீத மாற்றம் : -0.2%

**மையப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் : 5.8%


ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 3.3%

மாதாந்தச் சதவீத மாற்றம் : 0.4%

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்தில் நிலவிய தாழ்ந்த தளத்தின் காரணமாக 2019 பெப்புருவரியின் 2.4 சதவீதத்திலிருந்து 2019 மாச்சில் 2.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதேவேளையில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கமானது 2019 மாச்சில் -2.3 சதவீதம் மற்றும் 7.1 சதவீதங்களைப் பதிவுசெய்தது.

ஆண்டுச் சராசரி அடிப்படையில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றமானது 2019 மாச்சில் 1.7 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது.

மாதாந்த மாற்றங்களைக் கருத்திற்கொள்ளும் போது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2019 மாச்சில் 0.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு உணவு வகையிலுள்ள பொருட்களின், குறிப்பாக, அரிசி, தேங்காய் மற்றும் காய்கறிகளின் விலைகளில் அவதானிக்கப்பட்ட விலைக் குறைவு காரணமாக விளங்கியது. எனினும், உணவல்லா வகையில் வெறியக் குடிவகைகள் மற்றும் புகையிலை; போக்குவரத்து (பெற்றோல் மற்றும் டீசல்); ஆடை மற்றும் காலணி மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் துணை வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன.




பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2019 பெப்புருவரியில் 5.5 சதவீதத்திலிருந்து 2019 மாச்சில் 5.8 சதவீதத்திற்கு

---

[1] தேசிய நுகர்வோர் விலைச் சுடடெண் (2013 = 100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

அதிகரித்தமைக்கு உணவல்லா வகையில், குறிப்பாக, வெறியக் குடிவகைகள் மற்றும் புகையிலை துணை வகையில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமும் 2019 பெப்புருவரியின் 3.0 சதவீதத்திலிருந்து 2019 மாச்சில் 3.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்**
**தளம் : 2013 = 100**

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) |
| 2017 | மாச்சு | 119.5 | 122.3 | -0.3 | 0.2 | 8.6 | 7.0 | 5.6 | 6.6 |
| | ஏப்பிறல் | 121.0 | 122.5 | 1.3 | 0.2 | 8.4 | 5.9 | 6.0 | 6.6 |
| | மே | 121.8 | 123.0 | 0.7 | 0.4 | 7.1 | 4.7 | 6.1 | 6.4 |
| | யூன் | 123.4 | 123.1 | 1.3 | 0.1 | 6.3 | 4.1 | 6.1 | 6.1 |
| | யூலை | 122.4 | 122.9 | -0.8 | -0.2 | 6.3 | 4.2 | 6.2 | 5.9 |
| | ஓகத்து | 122.3 | 123.0 | -0.1 | 0.1 | 7.9 | 4.8 | 6.5 | 5.8 |
| | செத்தெம்பர் | 123.3 | 123.1 | 0.8 | 0.1 | 8.6 | 4.6 | 6.8 | 5.7 |
| | ஒத்தோபர் | 124.8 | 123.1 | 1.2 | 0.0 | 8.8 | 4.1 | 7.1 | 5.6 |
| | நவெம்பர் | 126.4 | 123.8 | 1.3 | 0.6 | 8.4 | 2.8 | 7.5 | 5.2 |
| | திசெம்பர் | 126.6 | 123.8 | 0.2 | 0.0 | 7.3 | 2.7 | 7.7 | 4.9 |
| 2018 | சனவரி | 125.8 | 123.9 | -0.6 | 0.1 | 5.4 | 2.1 | 7.6 | 4.5 |
| | பெப்புருவரி | 123.7 | 124.4 | -1.7 | 0.4 | 3.2 | 2.0 | 7.2 | 4.1 |
| | மாச்சு | 122.8 | 124.6 | -0.7 | 0.2 | 2.8 | 1.9 | 6.7 | 3.6 |
| | ஏப்பிறல் | 122.9 | 124.8 | 0.1 | 0.2 | 1.6 | 1.9 | 6.1 | 3.3 |
| | மே | 124.3 | 125.1 | 1.1 | 0.2 | 2.1 | 1.7 | 5.7 | 3.1 |
| | யூன் | 126.5 | 125.3 | 1.8 | 0.2 | 2.5 | 1.8 | 5.3 | 2.9 |
| | யூலை | 126.6 | 125.7 | 0.1 | 0.3 | 3.4 | 2.3 | 5.1 | 2.7 |
| | ஓகத்து | 125.4 | 126.3 | -0.9 | 0.5 | 2.5 | 2.7 | 4.7 | 2.5 |
| | செத்தெம்பர் | 124.4 | 126.9 | -0.8 | 0.5 | 0.9 | 3.1 | 4.0 | 2.4 |
| | ஒத்தோபர் | 124.9 | 127.3 | 0.4 | 0.3 | 0.1 | 3.4 | 3.3 | 2.4 |
| | நவெம்பர் | 127.7 | 127.6 | 2.2 | 0.2 | 1.0 | 3.1 | 2.7 | 2.4 |
| | திசெம்பர் | 127.1 | 127.6 | -0.5 | 0.0 | 0.4 | 3.1 | 2.1 | 2.4 |
| 2019 | சனவரி | 127.3 | 130.2 | 0.2 | 2.0 | 1.2 | 5.1 | 1.8 | 2.7 |
| | பெப்புருவரி | 126.7 | 131.3 | -0.5 | 0.8 | 2.4 | 5.5 | 1.7 | 3.0 |
| | மாச்சு | 126.4 | 131.8 | -0.2 | 0.4 | 2.9 | 5.8 | 1.7 | 3.3 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்